TAMIL NADU
GOVERNMENT GAZETTE
PUBLISHED BY AUTHORITY

No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008
Karhigai 11, Thiruvalluvar Aandu-2039

# Part VI --- Section 2
(Supplement)

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

---

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/ 8–6, 10. 09. 2007 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

**2003** ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 43 (1) ஆம் பிரிவிற்கு இணங்க தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு, மேற்சொன்ன விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக வகைசெய்கிற திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வறையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 86ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி மற்றும் முந்திய வெளியீட்டிற்குப் பின்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 21. 07. 2004 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ /DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்குப் பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பு) இல் வெளியிட்டுள்ளது.

## திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்

1. <u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் </u>:

(a) இந்த விதித் தொகுப்பு, 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த விதித்தொகுப்பு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

2. **தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பின் 27ஆம் ஒழுங்குமுறைவிதியின் (5) ஆம் மற்றும் (8) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிகளை விட்டு விடுதல், –**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பில், 27ஆம் ஒழுங்குமுறைவிதியில், (5) ஆம் மற்றும் (8)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிகள் விட்டு விடப்படுதல் வேண்டும்.

[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]

**இரா. பாலசுப்பிரமணியன்**
**செயலாளர்**